RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2121

OPEN ACCESS

# மங்கலவாத்தியம் ஓர் வரலாற்றுப்பார்வை

சுகன்யா அரவிந்தன் [அ,*]

[அ] இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

# A Historical Perspective of Mangalavattiyam

Suganya Aravindan [a,*]

[a] Department of Music, University of Jaffna, Jaffna, Sri Lanka.

* Corresponding Author: saravinthon@hotmail.com

Received : 30-09-2020
Revised : 15-02-2021
Accepted : 17-02-2021
Published : 03-03-2021

Check for updates

## ABSTRACT

From the earliest days of the Tamil music tradition, music was considered to be a combination of vocal music, instrumental music and dance. Each of these musical genres is closely intertwined. Knowledge of one helps to know about the other. Instrumental music has been interpreted as accompaniment to solo music and dance and as a solo specialty. In Bharata's book 'Natyashasthram', musical instruments are generally divided into four categories as nerve (tata), hole (kasira), skin (avanatta), kana (kanja). In this context, it is a research paper on the history and use of the Nagaswaram and thavil instruments, which are referred to today as the Mangala Vaathyam, which the Tamils have merged with their culture. This article also examines in detail the ideological changes that have taken place over time in the use of these two musical instruments. At the same time, the use of these instruments in the sociological context is taken into account. Finally, this article is a historical study of the lineage of musicians who have mastered these instruments.

**Keywords:** Mangala Vathyam, Naagaswaram, Cultural Identity, Music, Cultural Individuality

## ஆசிரியர் குறிப்பு



இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே இசைத்துறையிலே முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றிவரும் முனைவர் (திருமதி) சுகன்யா அரவிந்தன் அவர்கள் ஒரு கர்நாடக இசை மேடைக்கலைஞர் என்பதற்கப்பால் சமூகவியல், பரதநாட்டியம் மற்றும் கல்வியியல் ஆகிய துறைகளிலே புலமை பெற்றவர். துறை சார்ந்த ஒரு ஆய்வாளரும் கூட. பல உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளிலே கலந்துகொண்டு சிறந்த பல ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்து வருகின்ற ஒரு இசையியலாளர். 'இசைக்கலையும் ஆசிரியத்துவமும்', 'இசையியலும் ஆய்வியலும்', 'பாரதியார் பாடல்கள் சுட்டும் இசைமரபு' அடங்கலாகப் பல நூல்களை எழுதியிருக்கின்றார்.

## முன்னுரை

தமிழர்தம் வரலாற்றிலே நாகஸ்வரம் மற்றும் தவில் இரண்டும் மிகவும் முக்கியமான இசைக்கருவிகளாக காலந்தோறும் தமிழ்ப்பண்பாட்டிலே முதன்மைப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. தமிழர் இசையிலே பல மாற்றங்கள் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட பொழுதிலும் இவ்விரு

இசைக்கருவிகளும் எவ்வித மாற்றத்திற்கும் உள்ளாகாது, எவ்வித பண்பாட்டுக்கலப்புக்களாலும் அள்ளுண்டு போகாது தமிழர்தம் அடையாளமாக இன்றும் செழிப்போடு நிலைத்திருக்கின்ற ஒரு இசைக்கருவி என்றுசொன்னால் மிகையில்லை.

இக்கருவிகள் மங்களகரமான, கம்பீரமான இசை எழுப்புகின்றமையால் 'மங்கள வாத்தியம்' என்றும், மங்கல நிகழ்வுகளிலே முக்கியம் பெறுவதனால் 'மங்கல வாத்தியம்' என்றும் குறிப்பிடப்படுவது சமூக வழக்கமாக இருந்து வருகின்றது.

## மங்கள வாத்தியம்

நாகஸ்வரம் (நாகசுரம் அல்லது நாகஸ்வரம் அல்லது நாதசுரம் என்றும் அழைக்கப்படுகின்றது) ஒத்து, தவில் (தவல் அல்லது தவுல் எனவும் அழைக்கப்பட்டது) சல்லரி ஆகிய இசைக்கருவிகள் இணைந்துள்ள தொகுதி 'மேளம்' எனப்படும் (Elwin, 1941) இவற்றை வாசிப்போர் அல்லது இசைப்பவர் 'மேளக்காரர்' எனப் பொதுவாக அழைக்கப்படுவர். மேற்குறிப்பிட்ட இசை வாத்தியங்களிலே நாகஸ்வரமும், ஒத்தும் 'சுசிர' வகையினையும், கொட்டுவாத்தியமாகிய தவில் 'அவனத்த' வகையினையும், தாளத்திற்கான சல்லரி 'கன' வகையினையும் சேர்ந்தவை. இந்த இசைவாத்தியங்கள் பழைமை வாய்ந்தவை. நீண்ட வரலாற்றைக்கொண்டவை. கர்நாடக இசைமரபிலே இவை மிகப்பிரபல்யமான வாத்தியங்களாக் காணப்படுவதோடு, பரவலாகப் பயன்படுத்தப்படும் சிறப்பான வாத்தியங்களாகவும் மிளிர்கின்றன. மங்கள வாத்தியமாக இவை கோவில்களிலும், திருமணம் போன்ற வேறு பல நிகழ்வுகளிலும் இவை முக்கியமாக இடம் பெற்று வந்துள்ளன. தமிழ்மரபு சார்ந்து இந்தக்கருவிகள் இடம்பெறாத மங்களகரமான வைபவங்கள் இல்லை எனலாம். இக்கருவிகளின் மங்களகரமான இனிய நாதமே இதற்குக் காரணம் என்று சொன்னால் மிகையாகாது.

மங்கல வாத்தியங்களுள் துளை வாத்தியமாகக் காணப்படுகின்ற நாகஸ்வரமானது, நாதஸ்வரம் என்கின்ற பெயரால் சில இடங்களில் குறிப்பிடப்பட்டுகின்ற பொழுதிலும் 'நாகஸ்வரம்' என்கின்ற பெயரே இசை ஆய்வாளர்களால் சரியெனக் குறிப்பிடப்படுகின்றது (Chandrasekharan, 1976). நாதஸ்வரம் என்கின்றசொல் இந்த நூற்றாண்டின் முப்பதுகள் தொடக்கம்தான் வழக்கிலேற்பட்டதெனப் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி கூறியுள்ளார் (Sambamoorthy, 1929). ஆயினும் நாதஸ்வரம் என்கின்ற சொல்லின் பொருத்தப்பாடுபற்றி பேராசிரியர் வே இராகவன் இவர்கள் பல விமர்சனங்களை தன்னுடை எழுத்துக்களிலே முன்வைத்திருப்பதையும் நாம் காணமுடிகின்றது (Chandrasekharan, 1976). தமிழிலுள்ள பரத சாஸ்த்திர நூல்கள் சிலவற்றிலும்,வேறு சில இசைநூல்களிலும் இக்கருவிபற்றிய பதிவுகளை நாம் காணமுடிகின்றது. இதன்படி சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இக்கருவி வழக்கிலிருந்திருக்கின்றது என்பதற்கான பதிவுகளை நூல்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ளமுடிகின்றது. எடுத்துக்காட்டுகளாக தேவராஜசுவாமிகள் எழுதியுள்ள கந்தசஸ்டிகவசம், மகாபரத சூடாமணி (Alagesan, Serndanur Ramanathan, 2013; Viswanathaiyar, 1950) முதலிய நூல்கள் தரும் சான்றுகளைக் குறிப்பிடலாம். பின்னைய நூல் பெரும்பாலும் பரதசாஸ்த்திர நூலாயினும் வாத்தியங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் இரு செய்யுட்களிலே நாகஸ்வரம் பற்றிய பல்வேறு குறிப்புக்கள் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. மங்கள வாத்தியங்கள் என்னும் துளைக்கருவிகளைப் பற்றிய,

'முகவீணை நாகசுர மொழிபாம்பு நாதசுரந்

தகுசீங்கு குழன் முதலாய்ச் சாற்றுஞ் - சுகமிகவே

தங்குமிவ்வாத்தியத்தி555555555ற் காய்ந்திட்டார் நூல்வல்லோர்

மங்கள வாத்திமெனு நாமம்' (Viswanathaiyar,1950)

எனும் மகாபாரதசூடாமணிச்செய்யுள் இவ்வாத்தியங்களை இனங்காண்பதற்கான சிறந்த எழுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இது தவிர வேறுசெய்யுட்களிலும் 'நாதஸ்வரம்' என்னும் பதம் குறிப்பிடப்பட்டுள்ளது. நாதஸ்வரம் பற்றிய பல்வேறு விபரங்களை தொடர்ந்து 856 - 875 (Viswanathaiyar, 1950) வரிகளில் கூறப்பட்டிருப்பதைக்காணலாம். மேலும் செய்யுளிலே நாகஸ்வரம் ¸ நாதஸ்வரம் ஆகிய இரு பதங்களும் வந்துள்ளன. மற்றும் 'நாகசுர மொழிபாம்பு' என்பது பாம்பாட்டியின் மகுடியைக் குறிப்பதாக உரைஆசிரியர் கூறியுள்ளார். இந்நூல் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் தொகுக்கப்பட்டது. இதற்குப் பயன்படுத்தப்பட்ட மூலநூல்களும், மரபுகளும் பெரும்பாலும் முற்பட்ட காலத்தவை. நாகஸ்வரம் தெய்வீகத்தன்மையுள்ளதென்றும் இச்செய்யுளில் அழுத்திக் கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

'பாரப்பா நாதசுரமென்ற தாளம் பாங்கான சிவமென்று பகருவார்கள் நேரப்பா சுருதியிது சத்தியாகும்…' (Viswanathaiyar, 1950) என மகாபாரதசூடாமணியிலே வருகின்ற வரிகளும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். அதாவது வாத்தியத்திலிருந்து வரும் இசையானது, 'சிவம்' என்றும், சுருதியானது, 'சக்தி' என்றும் கருதப்படுகின்றது.

நாகஸ்வர வாத்தியத்தின் தோற்றம் பற்றி மேலும் பல செய்திகள் தேடலின் போது கிடைக்கப்பெறுகின்றன. அவைபற்றிய தகவல்களை நோக்குகின்றபொழுது.

'சுசிர இசை வாத்தியங்கள் வளர்ந்தவாற்றினையும், வரலாற்றினையும் நோக்கும் போது, நாகஸ்வரம் பிற்காலத்திலே தான் உருவாகியதெனத்தெரிகின்றது. புராதன அல்லது மத்திய கால இசைநூல்களிலோ, பிறநூல்களிலோ இது பற்றிய சான்றுகளில்லை'என பிரபல இசை ஆய்வாளர் கலாநிதி. வி. பிரேமலதா குறிப்பிட்டுள்ளார் (Premalathaa, 1985). 'நாகஸ்வரம் சுமார் 800 ஆண்டுகளாக நிலவி வந்திருக்கலாம் என பிறிதொரு பிரபல இசை ஆய்வாளர் திரு ரி. எஸ். பார்த்தசாரதி கூறியுள்ளார்' (Parthasarathy & Nagaswara, 1981) பேராசிரியர். பி. சாம்பமூர்த்தியும் இதே கருத்தினைக் கூறியுள்ளார். தமிழிலக்கிய மரபையொட்டிச் சில அறிஞர் கூறும் கருத்துக்கள் இந்தக் கட்டுரையில் பின்னர் தொடரும்.

நாகஸ்வரமும், தவிலும் ஏற்கனவே குறிப்பிட்டவாறு தென் பாரதத்திலுள்ள திராவிட மாநிலங்களுக்கு, குறிப்பாகத் தமிழகத்திற்குரியனவாகக் கொள்ளப்படுகின்றன. மேலும் இவற்றின் தோற்றம், வளர்ச்சி ஆகியனவற்றிற்கும், கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி ஆகியனவற்றுக்குமிடையிலே நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகத் தெரிகின்றது. எனவே, தென் பாரதத்திற்குரிய திராவிட மொழிகளிலும், வடமொழியிலுள்ள இலக்கிய மூலகங்கள், சாசனங்கள் முதலியனவற்றின் துணைகொண்டு நாகஸ்வரம், தவில் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

'நாகஸ்வரம்' என்கின்ற வாத்தியமானது, 'நாகசின்னம்', 'நாகசாரம்' எனவும் முற்காலத்திலேஅழைக்கப்பட்டு வந்துள்ளது. தமிழில் 'நாயனம்' எனவும் பேச்சு வழக்கில் 'நாகேனம்' எனவும் அழைக்கப்பட்டுள்ளது. இதனுடைய பழைய பெயர் 'புஜங்கஸ்வரம்' என இருந்திருக்கலாம்[9]. (Parthasarathy & Nagaswara, 1981) பழங்காலத்திலே புல்லாங்குழல் முக்கியமான சுசிர வாத்தியமாக விளங்கி வந்திருக்கின்றது. பிற்பட்டகாலங்களிலே தென்பாரதத்திலே நாகஸ்வரமும், வட பாரதத்திலே சணாயும் பிரதான துளை வாத்தியங்களாக மாற்றம் பெறத் தொடங்கின எனலாம். தவிலுக்கு முன் மிருதங்கம், முழவம் போன்றவை பிரதான அவனத்த வாத்தியங்களாக விளங்கின. தென் தமிழகத்திலே மிருதங்கம் போன்று பக்கவாஜ், தப்லா போன்றவை வடநாட்டிலே பயன்படுத்தப்பட்டு வந்தன. மேலும் பேரி, முரசு, தமரு (உடுக்கு) பஞ்சமுகவாத்தியம், தண்ணுமை போன்றவை குறிப்பிடற்பாலன. சைவ சமயக்கிரியைகளிலே தவிலானது 'பேரி' என்றே வடமொழியில் அழைக்கப்படுகின்றது. ஆகமங்களிலும்,

காலத்தால் முற்பட்ட நூல்கள் சிலவற்றிலும் 'பேரி' எனும் பதத்தினைக் காணமுடிகின்றது. இவ்வாறான பதிவுகளிலிருந்து இவ்வாத்தியங்களின் தொன்மை பற்றி நாம் தெரிந்து கொள்ளமுடிகின்றது.

கிபி 18ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த முத்துஸ்வாமி தீட்சிதரின் 'ஸ்ரீ தியாகராஜ மஹாத்வஜாரோஹன' எனத்தொடங்கும் ஸ்ரீ இராகக் கீர்த்தனையிலே,

'ஆகம சித்தாந்தப்ரதிபாத்யம்

நாகஸ்வரமத்தலாதிவாத்யம்'

என வரும் பகுதி குறிப்பிட்டுக்கூறப்பட்டக்கூடியது (க்ருதி மணிமாலை-1990) திருவாரூரிலே கோயில் கொண்டிருக்கும் தியாகேசப்பெருமானின் மஹோத்ஸவத்தின் முதலாம் திருவிழா பற்றி குறிப்பிடப்படடுகின்ற மேற்குறிப்பிட்ட கீர்த்தனையிலே, நாகஸ்வரம் எனும் பதமே வந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

வடமொழியிலுள்ள பெரிய சங்கீத சாத்திர நூலான 'சங்கீதரத்னாகரம்' (கிபி 13ம் நூ) பார்ஸ்வதேவருடைய 'சங்கீதசமயசாரம', சைவக்கோவிலமைப்பு, கிரியைகள் முதலானவற்றை விபரிக்கும் காமிகாமம் போன்றவற்றிலும் நாகஸ்வரம் பற்றிய குறிப்புக்களில்லை. ஆனால் முன்னைய இரு நூல்களிலும் 'முகவீணா' எனும் இசைக்கருவி பற்றிய குறிப்புக்கள் காணக்கிடைக்கின்றது என்று ஆய்வியலாளர்கள் நிறுவியிருக்கின்றார்கள். (சிவசாமி - 1995) வடமொழியிலுள்ள பிறிதொரு சங்கீத சாஸ்த்திரநூலாகிய அஹோபலரின் 'சங்கீதபாரிஜாதம்' என்ற நூலிலே நாகஸ்வரம் பற்றிய குறிப்புக்கள் காணக்கிடைக்கின்றன. இந்நூல் கிபி 1724-இலே பாரசீக மொழியிலே மொழிபெயர்க்கப்பட்ட, கிபி 18ம் நூற்றாண்டிற்கு முற்பட்டது. வடமொழியிலுள்ள ஸ்கந்த புராணம் சங்கர சங்கிதையிலுள்ள சிவரஹஸ்ய காண்டத்தினைச் சேர்ந்த சம்பவ காண்டத்திலே வரும் இசை வாத்தியப் பெயர்ப்பட்டியலிலே நாகஸ்வரம் என்னும் பதமே காணப்படுகின்றது (Chandrasekharan, 1976) கௌண்டின்ய ஸ்ரீநிவாஸகவி எழுதியுள்ள ஸ்ரீ ரங்க ராஜசரித பாண எனும் வடமொழி நாடகத்திலே பாம்பாட்டியொருவர் நாகசாரம் (நாகஸ்வரம்) வாசிக்க, பாம்பு படமெடுத்து ஆடும் காட்சி பற்றிய வர்ணனை குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது,

'உத்யன் நாகசார சுருதி சுருதி சுகாத்

உந்நம்ர போகபாணி' என்பதாகும். (Premalatha, 1985)

ஸ்ரீநாத என்பவர் தெலுங்கு மொழியில் எழுதியுள்ள கிரீடாபிராம (கிபி 1400 சேர்ந்தது.) எனும் நூலிலும் நாகஸ்வரம் எனும் பதம் இரு தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. விஜய நகரப் பேரரசரான கிருஸ்ண தேவராஜனின் ஆட்சிக்காலத்திலே (கிபி 16-ம் நூ.முற்பகுதி) வாழ்ந்த ஹரிப்பட்டர் என்பவர் தெலுங்கு மொழியில் எழுதியுள்ள நரசிம்ம புராணம், மூன்றாம் சர்க்கத்திலுள்ள நீண்ட இசை வாத்தியப் பட்டியலில் இக்கருவியின் பெயர் நாகசாரம் (நாகஸ்வரம்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. மேலும் கிருஸ்ண தேவராஜன் எழுதியுள்ள 'ஆமுக்தமால்யதா' எனும் தெலுங்கு மஹாகாவியத்திலே நாகஸ்வரக்கோஸ்டி பற்றிய குறிப்புண்டு.

இவைதவிர இவ்வாத்தியக் கலைஞர்கள் மன்னர்களாலும் ஆலயப்பரிபாலனங்களாலும் சிறப்புச்செய்யப்பட்டமைபற்றிய பதிவுகளையும் பண்டைய பதிவுகள் வாயிலாகத் தெரிந்து கொள்ளமுடிகின்றது. விஜயநகர மன்னனான சதாசிவராயன் காலத்தைச்சேர்ந்த (கிபி 1550-ம் ஆண்டு) கல்வெட்டொன்றிலே திருமலை நாயுடு என்பவன் தட்பாத்ரி தாலுகாவிலுள்ள நிட்டுரூ கிராமத்திலே நீலகண்டனின் கோவிலின் முன்னுள்ள 'சென்னகேசவராய' எனும் தெய்வத்திற்கு வழங்கப்பட்ட நன்கொடை பற்றிய குறிப்பிலே இக் கொடை 6 நடனகாரிகளுக்கும், பாகவதம் படிப்போருக்கும்

நாகஸ்வர வித்துவான்களுக்கும் வழங்கப்பட்டது, இவர்கள் இக்கோவிலின் சேவையிலே அமர்த்தப்பட்டவர்கள் (Premalatha, 1985). சதாசிவராயன் காலத்தையொட்டிய தேவலபுரக் கல்வெட்டொன்றிலே இங்குள்ள வசந்தமல்லிகார்ஜுன கோவிலிலே இரு நாகஸ்வரங்களும், இரு தவில்களும் வாசிப்பதற்கு ஒரு நாகஸ்வரக்கலைஞருக்கு வழங்கப்பட்ட நன்கொடை பற்றிக் கூறப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிட்ட கலைஞர் இவ்வாத்தியக்கோஸ்டியின் தலைவராயிருந்திருப்பார். கிபி 1554 ஆண்டினைச் சேர்ந்த திருப்பதிக் கல்வெட்டொன்றிலும் இரு நாகஸ்வர வித்துவான்கள் திருவேங்களப்பனால் நன்கொடை வழங்கி நியமிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது (Chandrasekharan, 1976).

கன்னடதேசத்திலும் இவ்வாத்தியத்திற்கு 'நாகஸ்வரம்' எனும் பதமே வழக்கிலிருந்து வந்ததாகத் தெரிகின்றது. 'நாகஸ்வரம் வாசிக்கப்படும் போது மான்(பாம்புபோல)ஆடுமா?' எனப் பொருள்படும் முதுமொழி ஒன்று கன்னடத்திலுள்ளது. மைசூர் மாநிலத்திலுள்ள கிபி 1632 ம் ஆண்டுக் கல்வெட்டொன்றின் படி ஒருகோவிலின் சேவைக்கு அமர்த்தப்பட்ட நால்வரில் ஒரு தொலுகாரரும் (தவில் காரரும்) ஒரு நாகஸ்வர வித்துவானும் அடங்குவர். இவர்களின் ஊழியத்திற்காக நிலமானியம் வழங்கப்பட்டிருந்தது, (இங்கு தவில்காரர், தொலுக்காரர் எனக் குறிப்பிட்படுவதைக்காணமுடிகின்றது. இது பேச்சுவழக்கு) (Premalatha, 1985) மலையாள மொழியிலும் இக்கருவி 'நாகஸ்வரம்' என்றே அழைக்கப்பட்டுவந்திருக்கின்றது. கல்கதாவிலுள்ள நூதனசாலையிலே காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள இந்திய இசை வாத்தியங்களின் பெயர்ப்பட்டியலைத் தயாரித்த கலாநிதி ஏ எம் மீர்வத் என்பவர் சணாயுடன் நாகஸ்வரம் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார். கலாநிதி வி பிரேமலதா என்கின்ற இசையியலாராய்ச்சியாளரும் நாகஸ்வரமே சரியான பதம் எனத் தன்னுடைய எழுத்துக்களிலே ஆதாரபூர்வமாக குறிப்பிட்டிருக்கின்றார்.

தமிழிலக்கியம் தரும் சான்றுகளை நோக்கும் போது கிபி 18ம் நூற்றாண்டைளவைச் சேர்ந்த 'கூழப்பநாயக்கன் காதல்' என்னும் நூலிலே நாகசுரம் என்கின்ற இசைக்கருவிபற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இதற்கு முற்பட்ட கிபி 16ம் நூற்றாண்டின் முடிவில் எழுதப்பட்ட 'இரத்தினகிரி உலா' என்கின்ற நூலிலுள்ள இசை வாத்தியங்களில் நாகஸ்வரம் பற்றியும், அதற்கான தவில் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரபல சங்கீத ஆய்வாளரான ஆபிரகாம் பண்டிதர் தமது 'கருணாமிருதசாகரம்' எனும் அரிய நூலிலே நாகஸ்வரம் எனும் இசைக்கருவிபற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். சேர். பொன். இராமநாதனின் அகராதியிலும் நாகஸ்வரம் என்னும் பதம் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. மதுரைத்தமிழ்ச்சங்க அகராதியிலே 'நாகசின்னம்' என்னும் பதம் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. தரங்கம்பாடியில் வெளியிடப்பட்ட லூதரன் (கிறிஸ்தவ) மின் தமிழ் - ஆங்கில அகராதியில் 'நாகசின்னம்', 'நாகசுரம்', 'நாகஸ்வரம்', 'நாகசாரம்' ஆகிய பதங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாண அகராதி ஒன்றிலே 'நாகசின்னம்' எனும் பதம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது, 'நாகசாரம்' எனும் பதமும் உண்டு. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதியிலே நாகஸ்வரம்(நாகசுரம்) எனும் பதமும், பேச்சு வழக்கில் 'நாதஸ்வரம்' என நிலவுவதாகவும் கூறப்பட்டுள்ளன. தமிழ்க்கலைக்களஞ்சியத்திலே 'நாகசுரம்' எனும் பதம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பிற்காலத்திலே தமிழில் எழுதப்பட்ட பரதசாஸ்த்திர நூல்களான அறம் வளர்த்தானின் 'பரதசங்கிரகம்', 'பரதசேனாபதியம்' ஆகியவற்றிலும் 'நாகஸ்வரம்' எனும் பதம் கையாளப்பட்டிருப்பது அந்நூல்கள் வாயிலாகத் தெரியவருகின்றது.

இதுவரை கூறப்பட்டுள்ள சான்றுகளைத் தொகுத்து நோக்கும் போது 'நாகஸ்வரம்' எனும் பதம் பொதுவாகத் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், வடமொழி முதலிய மொழிகளில் இக்கருவியைக்குறிக்க பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதனை அறிந்து கொள்ளமுடிகின்றது. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட தமிழர் இசை (1984) எனும் நூலிலே அதன்

ஆசிரியரான கலாநிதி ஏ. என். பெருமாள், இந்த இசைக்கருவிக்கு நாதசுரம் என்னும் பதத்தையே பயன்படுத்தியிருப்பதைத் தெரிந்துகொள்ளமுடிகின்றது.

இவ்வாத்தியம் கிபி 15ம் நூற்றாண்டுகளிலே நன்கு அறியப்பட்டிருந்திருக்கின்றது. இதற்கு முன்னோடியாகப் புல்லாங்குழல் அல்லது மகுடி போன்ற வாத்தியங்கள் இருந்திருக்கின்றன. மேலும் சில தமிழறிஞர்கள் இக்கருவியின் பழைமை குறித்துச் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். கலாநிதி ஏ என் பெருமாள் அவர்கள் 'குழல் என்பது தனியாகத் தமிழிலக்கிய நூல்கள் சிலவற்றில் வரும் போதுஅது நாதசுரத்தைக் குறிப்பிடுவதாக அமைகின்றது' எனக் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக குமரகுருபரரின் மதுரைக்கலம்பகத்தில் 'குழலிசை வேயிசை' எனவருவதில், வேயிசை என்பது மூங்கிலாலான புல்லாங்குழலையும், குழல் என்பது நாதசுரத்தையும் குறிப்பதாக அவர் கருதுகிறார். நாதஸ்வரத்தைக் குழல் என்று தனித்துக்கூறும் வழக்கம் இருப்பதை அவர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் நாதசுரம் முற்பட்ட காலத்தில் 'எழினி', 'வங்கியம்' எனவும் அழைக்கப்பட்டதென ஏ என் பெருமாள் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இவர் தவிர திருவாசக ஒளிநெறி என்னும் நூலிலே வ.சு. செங்கல்வராயபிள்ளை 'எழினி' எனும் பதம் நாதசுரத்தைக் குறிப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றார்[21]. (Perumal A.N.-1984) உதாரணமாக எடுத்துக்கூறி எழினியும் வங்கியமும் நாதசுரத்தைக் குறித்துநிற்கின்றது என ஏ. எம் பெருமாள் அவர்கள் தன்னுடைய பதிவுகளிலே எழுதிச்செல்கின்றார். மேலும் இதேஅறிஞர் சங்ககால வரியிலிருந்தும் இந்த குழல் எனப்படுகின்ற கருவியின் வளர்ச்சியினைப் பொதுவாக நோக்கலாம் என்கின்ற கருத்தையும் தன்னுடைய பதிவுகளிலே குறிப்பிட்டிருக்கின்றார் (Sambamoorthy, 1929). ஆனால் இக்கருத்துக்கள் அனைத்தும் குழல், நாதஸ்வரம் பற்றிய ஒரு ஆழமான ஆய்வுக்கான முன்மொழிவுகளாக அமையலாம்.

நாகஸ்வரம் பற்றி சமூகநிலைசார்ந்து மற்றுமொரு வேறுபட்ட கோணத்திலே இக்கருவியின் தோற்றத்தின் ஆணிவேரை நோக்கலாம். பொதுவாக நாகஸ்வரம் நா கத்துடன் (பாம்புடன்) தொடர்புள்ளதென்ற கருத்து காலம் காலமாக தமிழ்ச் சமூகத்திலே ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு கருத்தாகும். ஏற்கனவே குறிப்பிட்ட 'கிரீடாபிராம' எனும் நூல்தரும் சான்று, மற்றும் கன்னடப்பழமொழி முதலியன இக்கருவியை நாகத்துடன் தொடர்புபடுத்திக் காட்டுவனவாக அமைகின்றன. இந்தக்கருவி நாகத்திற்கு மகிழ்ச்சியையூட்டி அதனைக் கவர்ந்தது, எனவே ஒருவகை மகுடியின் (பாம்பாட்டி ஊதும்குழலின்) அடிப்படையிலிது உருவாக்கப்பட்டிருக்கலாம். இந்த மகுடி(மகிடி) அல்லது புஜங்கஸ்வரம் பற்றி பழைய நூல்களிலே குறிப்புக்கள் வந்துள்ளன. தமிழகத்திலுள்ள செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருக்கழுக்குன்றக்கோவிலில் ஒருவர் மகுடி வாசிக்கப் பாம்பு படமெடுத்து ஆடுவதைச் சித்தரிக்கும் சிற்பம் உள்ளது (Sambamoorthy, 1929). நாகஸ்வரம் உருவாகிய போது அதன் ஸ்வரம் புஜங்கஸ்வரத்தினது போன்றிருந்தமையால் அதனை வேறுபடுத்த நாகஸ்வரம் எனும் பதம் பயன்படுத்தப்பட்டது (Sambamoorthy, 1929). நாகஸ்வரம் எனும் பதம் மருவி நாகசுரம், நாதஸ்வரம் அல்லது நாதசுரம் என அழைக்கப்பட்டிருக்கலாம். மேலும் நாகருடைய வாத்தியமாகையாலும் இது நாகஸ்வரம் எனப் பெயர் பெற்றிருக்கலாம் எனச்சிலர் கருதுகின்றனர்.

நாகஸ்வரத்திற்கான தவிலும் இது எழுந்த காலப்பகுதியிலேயே தோற்றம்பெற்றிருக்கவேண்டும். ஏற்கனவே குறிப்பிட்ட இரத்தினகிரி உலா, மகாபரத சூடாமணி முதலிய நூல்களிலே தவில் பற்றிய குறிப்புக்கள் உண்டு. இவற்றிற்கு முற்பட்ட கிபி 15-ம் நூற்றாண்டிலே வாழ்ந்த அருணகிரிநாதரின் திருப்புகழிலே தவில் பற்றி இடங்களிலே குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது இரத்தினகிரி உலா எழுந்த காலப்பகுதியில் (கிபி 16-ம் நூற்றாண்டளவில் அல்லது அதற்கு முன்) யாழ்ப்பாணத்தமிழரசில் முத்துராஜரால் எழுதப்பட்ட கைலாயமாலை எனும் நூலிலே நல்லூரிலே

நிறுவப்பட்ட சைலாசநாதர் ஆலயத்தில் நடைபெற்ற திருக்குடமுழுக்குப் பற்றிய விவரணம் உண்டு. இத்தகைய விபரணம் வேறொரு நூலிலும் இல்லை. இங்கு நடைபெற்ற வைபவத்தின் போதுவாசிக்கப்பட்ட இசை வாத்தியங்களிலே 'சல்லரி, பொற்பேரி, தவில், முரசு, தண்ணுமை' முதலியன பற்றிக் கூறப்பட்டுள்ளன. ஏற்கனவே குறிப்பிட்ட தேவராஜசுவாமிகளின் நூலிலும் உருத்திர வீணை, நாதசுரமேளம், சங்கீதமேளம் முதலியன கூறப்பட்டுள்ளன. இவ்விரு நூல்களிலும் இவ்வாத்தியங்கள் மங்களத்தை ஏற்படுத்துவதாகவும் கூறப்பட்டுள்ளன.

பிற்பட்ட காலங்களிலே கல்வெட்டுக்களிலே தவில், நாதஸ்வரம் மற்றும் அவற்றோடு கூடிய வேறு பல கருவிகள் பற்றியும் இவற்றை வாசித்தோர்க்கான கொடுப்பனவுகள் பற்றிய தகவல்களைப்பற்றியும் பதிவுகளைக் காணமுடிகின்றது. கல்வெட்டொன்றிலே 'தவிலும் முரசும் சேமக்கலமும்' என்ற குறிப்பு பற்றிக் காணமுடிகின்றது. பிறிதொரு கல்வெட்டிலே 'தொலநாகசுரகாறர் ( தவில், நாகசுரம் வாசிப்போர்) எம்பெருமானடியார்க்குப் பணம் 2 தொகை நாகசுரக்காறருக்குப் பணம் 2' எனத் தவில், நாகஸ்வரம் வாசிப்போர்க்கான கொடுப்பனவுகள் பற்றிய பதிவுகளையும் காணமுடிகின்றது. [27.] (ஆளவந்தார். ஆர் -1981)

நாகஸ்வரத்திற்குப் சில இசைக்கருவிகள் முன்னோடியாக இருந்தது போலத் தவிலுக்கும் சில இசைக்கருவிகள் முன்னோடியாக இருந்திருக்கின்றன. இவ்வகையில் மிருதங்கம், முழவு போன்றவை குறிப்பிடத்தக்கவை. கலாநிதி ஏ. என் பெருமாள் சங்க இலக்கிய நூல்களான மலைபடுகடாம், அகநானூறு முதலியனவற்றிலே வரும் முழவுகளில் ஒரு முழவு தவிலாயிருந்திருக்கலாம் என்கின்ற தன்னுடைய கருத்தினைப் பதிவுசெய்திருக்கின்றார்.

சடங்காசாரங்கள் என்பதற்கப்பால் மக்களை மகிழ்வித்தல் என்பது இவ்வாத்தியத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. இருந்தாலும் நாகஸ்வரம், தவில் வாத்தியக்கலைகள் சிறப்பாகக் கோவில்களிலேதான் வளர்ச்சி பெற்றன எனலாம். எனினும் இவை புனித கலைகளாகக் கோவில்களில் இடம்பெறும் கிரியைகளிலும், வழிபாட்டிலும் இன்றியமையாத இடம் பெற்று இறைவன் ஆராதனைக்குரிய புனித இசை வாத்தியங்களாக இன்றும் திகழ்கின்றன. இதே வேளையில் கோவிலுக்கு வெளியே நடைபெறுகின்ற திருமணம் போன்ற உலகியல் சார்பான விடயங்களிலும் இவை கட்டாயமாக இடம்பெற்று வருகின்றன.

ஏற்கனவே குறிப்பிட்ட தென் பாரத மாநிலங்களிலும், இந்தியாவுக்கு வெளியே இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளில், குறிப்பாகத் தமிழர் வாழுகின்ற பிரதேசங்களில் இவை முக்கிய இடம் வகித்தன. கோவில்களிலும் வீடுகளிலும் பிற இடங்களிலும் குறிப்பாக வெளியே வாசிப்பதற்கு இவை மிகவும் உகந்தவை. பரந்த வெளியிலே, வெகு தொலைவிலும் கேட்பதற்கு இவற்றின் நாதம் இன்பம் பயக்கும். எனவே இவற்றின் வெளிக்கச்சேரிகள் மிகப்பிரமாதமாக நடைபெறும். பண்டிதரும், பாமரரும் கேட்டின்புறும் நாத இன்பத்தினை அல்லது சுகத்தினை இவை அளிப்பன.

கர்நாடக இசையின் சிறப்பினைப் பரவலாக்குதலில் இவற்றின் பயன்பாடு நன்கு குறிப்பிடற்பாலதே. பின்னிரவு வரை நடக்கும் கச்சேரிகளை மக்கள் கேட்டு ரசிப்பர். நாதஸ்வரக்கலைஞர் சாதாரண இசைக்கலைஞர் அல்லர். இவர்கள் இதனைக் கையாளுவதற்குக் குறிப்பிடத்தக்க திறமை பெற்றிருக்கவேண்டும் . இதனுடைய பாரிய ஒலியினாலும், சக்தியினாலும் இது கூடுதலாக ஒரு வெளியரங்கு வாத்தியமாகவே விளங்குகின்றது. இதனுடைய நாதம் அண்மையிலிருந்து கேட்பதை விடத் தூரத்திலிருந்து கேட்பதற்கே குளிர்ச்சி, குழைவு, மென்மை கொண்டதாக இன்பம் பயக்கும்.

நாகஸ்வர இசை மிகத்தூய்மையானதாகும். இக்காலத்திலே சிலர் நாட்டார் பாடல்களையும், மெல்லிசைப்பாடல்களையும் இதில் வாசித்தாலும் உயர் ரகக் கர்நாடக இசையே இதற்குச்சிறந்தது. கர்நாடக இசையின் பல்வேறு நுட்பங்களையும் பாணிகளையும் நன்கு புலப்படுத்தும் சிறந்த வெளிக்கள வாத்தியமாக இது திகழ்கின்றது. தக்கவாறு பயன்படுத்தினால் மனிதகுரல் போல இசைக்கும் தன்மை கொண்டது இவ்வாத்தியம். நாதஸ்வரத்திலே வாசிக்கமுடியாத கர்நாடக இசை அம்சங்கள் எதுவும் இல்லையென நாகஸ்வர வித்துவான்கள் குறிப்பிடுவார்கள் (Parthasarathy & Nagaswara, 1981). கர்நாடக இசைநுட்பங்களும் இசை உருப்படிகளும் பலதரப்பட்டன. பலவேறுபட்ட நுட்பங்களைக் கொண்டன. நாதஸ்வரக்கலைஞர்கள் உருப்படிகளுக்கு இராக ஆலாபனை வாசித்தல், கற்பனைஸ்வரங்கள், இராகம், தானம், பல்லவி முதலியவற்றையும், பாடல் வகைகளையும் கோவில்கள், வீடுகள், போன்றவற்றிலே இடம்பெறும் கிரியைகள், சடங்குகள், முதலியவற்றின் தாற்பரியங்களையும் நன்கு அறிந்துசந்தர்ப்பங்களின் பொருத்தப்பாடுகளுக்கேற்ப வாத்தியமிசைக்கும் திறன் கொண்டவர்கள். நாதஸ்வரத்திற்கென மல்லாரி, ரத்தி போன்ற சிறப்பான, தனித்துவமான இசை மரபுகளும் இவ்வாத்தியமரபிலுண்டு. தவில் வித்துவான்களும் இவற்றை நன்கு கவனித்து, உணர்ந்து, புரிந்துகொண்டு நாகஸ்வரத்திற்கு இணைவாக வாசிப்பர். நாகஸ்வர ஓசையின் இனிமையும், அழகும், குளிர்மையும், குழைவும் தவிலின் பிரமாதமும் கச்சிதமும் பிற சிறப்புக்களும் முரணின்றி ஒன்றிணைவதும் அற்புதமாக இருக்கும். இவை ஒன்றிணைந்த கச்சேரி வாத்தியங்களாகவும் தனிக்கச்சேரி வாத்தியங்களாகவும் விளங்குகின்றன. இசை அரங்குகளில் மாத்திரமின்றி தற்காலத்திலே நடன அரங்குகள் சிலவற்றிலும் இவ்வாத்தியஇசை இடம்பெறுகின்றது.

காலம் காலமாக சுருதிக்காக 'ஒத்து' எனப்படுகின்ற வாத்தியம் நாதஸ்வரத்துடன் எப்பொழுதும் வாசிக்கப்படும். இதுவும் நாகஸ்வரம் போன்றதாகிலும் பார்க்கச் சற்றுப்பெரியதாகும். அதன் கீழ்ப்பகுதியிலே 5 அல்லது 6 துளைகள் இருக்கும். குறிப்பிட்ட ஸ்தாயியினை ஏற்றவாறு இத்துளைகள் ஓரளவு அல்லது முற்றாக மூடப்பட்டிருக்கும். இக்காலத்திலே காலமாற்றங்களுக்கேற்ப சுருதிப்பெட்டி வாசிக்கப்படுகின்றது

நாகஸ்வரம், தவில் கலைஞர் பெரும்பாலும் மரபுவழிக்கலைஞர்களாகவே காணப்படுகின்றனர். இக்கலைகள் மரபு வழிக்கலைகளாகவே இசை வேளாளர் குடும்பங்களிலே வளர்ந்து வந்துள்ளன. பொதுவாகத் தேவதாசிகள் மத்தியிலே நிலவி வந்த, பரதக்கலை எவ்வாறு சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் பரலவலாகக் கற்கும் கலையாகத் தற்காலத்தில் மாறியுள்ளதோ, அதுபோல் நாகஸ்வர, தவில் கலைகளை விருப்பமுள்ள ஏனையோரும் கற்றுச்சிறப்புறும்நிலை இன்று காணப்படுவது இக்கலையின் மேமைக்கு பலம்சேர்ப்பதாக அமைகின்றது.

இந்தியாவிலுள்ள ஹிந்துஸ்தானி இசைக்கலையினைப் போன்று இதிலும் சில முஸ்லிம் கலைஞர்கள் தற்போது ஈடுபட்டு மிகச்சிறந்த கலைஞர்களாகத் திகழ்கின்றார்கள்.

இக்கலைகள் இன்றும் பெரும்பாலும் குருகுல முறைப்படியாகவே கற்பிக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்திலே சில இடங்களிலே நிறுவன ரீதிளாகவும் இவை தற்காலத்திலே கற்பிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் இதனைக் கற்பதற்குப் காலப் பயிற்சி மிக மிக அவசியம்.

இக்கலைமரபினைப் பல வித்துவான்கள் காலந்தோறும் தம்முடைய அர்ப்பணிப்பான கலைச்சேவையினால் வளர்த்துச்சென்றிருக்கின்றனர். இவர்களிலே முன்னைய தலைமுறையினைச் சேர்ந்த திருப்பாம்புரம் சாமிநாதபிள்ளை, கீழ்வேளூர் கந்தசாமிப்பிள்ளை, திருமங்கலக்குடி முத்து வீராசாமிப்பிள்ளை, கும்பகோணம் சிவக்கொழுந்துப்பிள்ளை, முதலியோரைக்குறிப்பிடலாம். தொடர்ந்து கூறை நாடு நடேசபிள்ளை, திருமருகல் நடேசபிள்ளை, மன்னார்குடி சின்னப்பத்திரியாபிள்ளை,

செம்பொன்னார் கோயில் ராமசாமிப்பிள்ளை, திருப்பாம்புரம் சகோதரர்கள், மதுரை பொன்னுசாமிப்பிள்ளை, நாகூர் சுப்பையாபிள்ளை, திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, திருவீழிமிழலை சகோதரர்கள், வேதாரண்யம் வேதமூர்த்தி, அங்கப்பா பிள்ளை, நடராஜசுந்தரம் முதலியோர் தலைசிறந்த நாதஸ்வரக்கலைஞர்கள் ஆவர். மேலும் திருவெண்காடு சுப்பிரமண்ய பிள்ளை, செம்பொன்னார் கோயில் தட்சணாமூர்த்திப்பிள்ளை, பி.எஸ். வீராசாமிப்பிள்ளை, திருவீழிமிழலை நடராஜசுந்தரம் பிள்ளை, ஆண்டான்கோயில் செல்வரத்தினம், ஸேக் சின்னமௌலானா, நாமகிரிப்பேட்டை கிருஸ்ணன், டி.எஸ். ராஜரத்தினம்பிள்ளை, எம். பி, என். சேதுராமன், எம். பி. என். பொன்னுச்சாமி, எஸ். ஆர்.டி.முத்துக்குமாரசுவாமி, எஸ். ஆர்.டி. வைத்தியநாதன், கிஞ்சுக்குடி கி.பி. கணேசன் முதலிய சமகாலக்கலைஞர்களும் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியவர்கள்.

திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை மிகச்சிறந்த நாகஸ்வர வித்துவான். சடங்குகளிற்காக வாசிக்கப்பட்டிருந்த இசைவாத்தியத்தினை, இசைக்கச்சேரி வாத்தியமாக மிக உயர்ந்த ஸ்தானத்திற்கு உயர்த்தியவர் ராஜரத்தினம்பிள்ளை என்று சொன்னால் மிகையில்லை. மிகப் பொருத்தமாவே 'நாதஸ்வரச்சக்ரவர்த்தி' எனப்போற்றப்பட்டவர். இவ்வாத்தியத்திற்காக புதிய பாணியை உருவாக்கியவர். பஇந்தியாவின் வடநாட்டைச்சேர்ந்த புகழ் பெற்ற சணாய்க் கலைஞர் உஸ்ரத்பிஸ்மில்லகான் அவ் இசைக்கருவியிற் காட்டிய சிறப்பான நுட்பங்களை இவர் நாகஸ்வரத்திலே வாசித்து சாதித்திருக்கின்றார். இவர் கையாண்ட நாகஸ்வரபாணி கேட்போரை நன்கு கவரும் தன்மையுடையதாய் விளங்கிற்து.

ஸேக் சின்னமௌலானாவை போன்று முஸ்லிம் தலைஞர்களிலே ஆந்திரா மாநிலத்திலுள்ள குண்டூரினைச் சேர்ந்த ஜனாபா காலி ஸாபி மெஹ்யூப் என்பவரும் அவருடைய கணவராகிய ஸேக் மெஹ்யுப் சுHபானி என்பவரும் நாகஸ்வரக்கலைஞர் தம்பதிகளாக உள்ளனர். இவர்களை விட வேறு சில முஸ்லிம் கலைஞர்களும் உள்ளனர்.

தவில் கலைஞர்களிலே ஸ்ரீவாஞ்சியம் கோவிந்தபிள்ளை (கோடையிடி கோவிந்த தவிலாளர் எனப்புகழப்பட்டவர்) அம்பாசமுத்திரம் கண்ணுச்சாமிபிள்ளை, அம்மாபேட்டை பக்கிரியாப்பிள்ளை, நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, வழுவூர் முத்துவீருப்பிள்ளை, நாச்சிமார் கோவில் ராகவப்பிள்ளை முதலியோர் தலைசிறந்த தவில் கலைஞர்களாகத் திகழ்ந்தனர். கும்பகோணம் தங்கவேலுப்பிள்ளை, மாயூரம். பி. பழனிவேல்பிள்ளை, சி.பி. நாராயணசாமிப்பிள்ளை, திருவிடைமருதூர் மாலி, (டி.எஸ். மகாலிங்கம்) வலயப்பட்டி சுப்ரமணியம், அரித்துவாரமங்கலம் ஏ.கே.பழனிவேல், திருவாளப்புத்தூர் டி.ஏ. கலியமூர்த்தி, வட பாதி மங்கலம் வி.என்.ஜி. தட்சணாமூர்த்தி, டி. ஆர். கோவிந்தராஜன், அகத்தீஸ்வரம் அருணாசலம் முதலிய கலைஞர்கள் நன்கு குறிப்பிடப்படவேண்டியவர்கள்.

தமிழகத்திலே வழக்கிலிருந்த பல கலைவடிவங்கள் இலங்கையிலும் காலத்திற்குக் காலம் பரவலாக்கம் பெற்றிருந்தன. அந்தவகையிலே நாதஸ்வரம் மற்றும் தவில் இசைக்கலைமரபு ஒன்று இலங்கையிலும் இருந்திருக்கின்றது. இன்றும் மிகச்செழிப்பாக இக்கலைமரபானது பேணப்பட்டுவருகின்றது. இலங்கையிலே குறிப்பாக யாழ்ப்பாணத்திலே நெடுங்காலமாக நாதஸ்வர, தவில் கலைஞர்கள் வாழ்ந்து வருகின்றனர். இக்கலைஞர்களின் மையங்களில் யாழ்ப்பாணமும் ஒன்று. யாழ்ப்பாண சரித்திரம் கூறும் கைலாயமாலை இதற்குக் தக்க சான்றாகும். இங்கு வாழ்ந்த, வாழுகின்ற நாகஸ்வரக்கலைஞர்களிலே மு. மாணிக்கம், சோ. உருத்திராபதி, சு. அமிர்தலிங்கம், நா. சோமஸ்கந்தர், சோ. பக்கிரிசாமி, சு.க. ராசா, என். ஆர். கோவிந்தசாமி, என். கே. பத்மநாதன், செ. சிதம்பரநாதன்,

பாலகிருஸ்ணன், பாஞ்சாபிகேசன், கோ. கானமூர்த்தி, கோ. பஞ்சமூர்த்தி சகோதரர்கள் முதலியோர் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியவர்கள்.

தவில் கலைஞர்களிலே திருவாளர்கள் காமாட்சி சுந்தரம், வைரவநாதன், இனுவில் பழனிவேல், மூளாய் ஆறுமுகம், வலங்கைமான் ஆ. சண்முகசுந்தரம், தட்சிணாமூர்த்தி, என்.ஆர். சின்னராசா, நாச்சிமார்கோவிலடி கணேசபிள்ளை, கைதடி பழனி முதலியோரைக்குறிப்பிடலாம். காலம்சென்ற காமாட்சிசுந்தரமும், தட்சணாமூர்த்தியும் தவில் மேதைகளாக விளங்கினர். நாதஸ்வரம் மற்றும் தவில் இசைவாத்தியங்களை நன்கு இசைக்கும் பெண்கலைஞர்களும் யாழ்ப்பாணத்திலே இருக்கின்றனர். முன்னவர் இட்ட கலைத்தடங்களில் இன்றும் நாகஸ்வரக்கலைஞர்களும் தவில் கலைஞர்களும் தங்களது கலைப்பணியினை செவ்வனே முன்னெடுத்து வருகின்றனர். கலைப் பாரம்பரியத்தினைக்காத்து வருகின்றனர் என்றால் மிகையில்லை.

## முடிவுரை

நாதஸ்வரமும், தவிலும் காலந்தோறும் பல சமூக பண்பாட்டின் அடையாளமாக வளர்ந்து வந்திருக்கின்றது. இதற்கு இவ்வாத்தியத்தின் காத்திரமும் கனதியான ஒலியும், சாஸ்த்திரியமரபிற்கும் கிராமிய மரபிற்கும் இணைந்துசெல்லக்கூடிய வாய்ப்பு இவ்வாத்தியத்திலே கிடைக்கின்ற காரணத்தினாலும் இன்றுவரை மங்காது செழிப்போடு சமூகத்திலே இருந்து வருகின்றது. மேலும் இது ஒரு பாரம்பரியம்மிக்க சமூகக்கலையாக பண்பாட்டிலே இணைந்திருப்பதும் இதன் காத்திரமான நிலைப்பிற்குக் காரணம் என்று சொன்னால் மிகையாகாது.

## References

Alagesan, Serndanur Ramanathan (2013) Skanda Shasti Kavacham (in Tamil and English) (4th ed.). Sivakasi, Tamil Nadu: Nightingale. pp. 3, 10–11

Chandrasekharan, Sri K. (1976) Dr. V. Raghavan: his scholarship & services. The Journal of the Music Academy, Madras, 47, pp. 151-155. Madras: The Music Academy.

Elwin, D.H., (1941) Census of India, Vol. II: Madras Tables, GIPE Census Documents, https://dspace.gipe.ac.in/xmlui/handle/10973/37348

Parthasarathy T.S., Nagaswara, (1981) Souvenir of the 55th conference of the music Academy, Madras,1981: pg 64

Premalathaa, V., (1985) Music through the Ages, Delhi-, p.332

Sambamoorthy, P., (1929) South Indian music series. Indian Music Publishing House.

Viswanathaiyar, R., (1950) abhinaya Darpana vilasam: Adyar:Lyrics – 855 - 858

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License